**தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

பொது முயற்சிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 வருமான மதிப்பீடு தயாரிப்பதிலுள்ள பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2002-03:00 வருமான குறியீட்டிலும் 2002:04:00 வருமானக் குறியீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப மதிப்பீடு மற்றும் 2020 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீட்டிற்கு இடையே முறையே ரூபா 28,173 மில்லியனாலும் ரூபா 1,971 மில்லியனாலும் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட வருமானத்திற்கு பதிலாக ஆரம்ப மதிப்பட்டில் வருமானத்தை உள்ளடக்கியமை இதற்கான காரணமாக இருந்தது. | சரியான தகவல்களை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மதிப்பீட்டு வருமானம் நி.பி 85(2) இன் பிரகாரம் ஆண்டின் நடுப்பகுதியில் திருத்தம் செய்யப்பட்டு அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொண்டுள்ளதாக | முறையான அங்கீகாரமொன்றின் பேரில் வருமான மதிப்பீடு திருத்தம் செய்யப்பட வேண்டும். |

(இ) அதன் பிரகாரம் அந்த திருத்திய வருமான மதிப்பீடு மற்றும் உள்ளவாறான வருமானம் பரிசோதனை செய்யும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

I வருமான குறியீடு 20:02:03 - இலாபம்

| | | | |
|---|---|---|---|
| i | 2020 ஆம் ஆண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 30,961 மில்லியனாக ஆக இருந்ததுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 14,768 மில்லியனாக இருந்த காரணத்தினால் அது திருத்திய மதிப்பீடில் 48 சதவீதமாக இருந்தது. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக பொது முயற்சிகள் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவடைந்திருந்தது. | சரியான கொள்கையொன்றை தீர்மானிப்பதற்காக அரசின் செலவினங்களை எந்த மட்டத்தில் வைக்க வேண்டுமென தீர்மானிப்பதற்காகவும் வரவு செலவுத் திட்ட விலகல் எவ்வளவு என்பதை தீர்மானிப்பதற்காகவும் கண்காணிப்பு செயற்பாடுகள் மற்றும் கொள்கை பகுப்பாய்விற்காகவும் வருமான எதிர்வுகூல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கையிடுவதை முறைப்படுத்த வேண்டும். |
| ii | 7 நிறுவனங்களுக்குரிய திருத்திய வருமான மதிப்பீட்டிற்கு ஒப்பாக உள்ளவாறான வருமானம் குறைவடைந்தமை 33 சதவீதத்திற்கும் 84 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | அனைத்து அரச நிறுவனங்களிலிருந்தும் அரசின் இலாபம் மற்றும் பங்கிலாபம் அறவிடப்பட வில்லை. | - மேற்படி - |
| iii | 12 நிறுவனங்கள் மூலம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,398 மில்லியன் வருமானமொன்று உழைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டில் எவ்வித வருமானமொன்றும் உழைத்தருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| iv | தேசிய முகாமைத்துவ நிறுவகம், முகாமைத்துவு பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் தேசிய லொத்தர் சபை ஆகிய 03 நிறுவனங்கள் கடந்த 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலாபத்தில் வருமானத்திற்கு எவ்வித பங்களிப்பினையும் வழங்கியிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக பொது முயற்சிகள் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவடைந்திருந்தது. | சரியான கொள்கையொன்றை தீர்மானிப்பதற்காக அரசின் செலவினங்களை எந்த மட்டத்தில் வைக்க வேண்டுமென தீர்மானிப்பதற்காகவும் கண்காணிப்பு செயற்பாடுகள் மற்றும் கொள்கைகள் பகுப்பாய்விற்காகவும் வருமான எதிர்வுகூறல் மற்றும் வருமான சேகரிப்பு அறிக்கை வைத்துக்கொள்ளல் முறைப்படுத்த வேண்டும். |
| v | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மக்கள் வங்கியால் 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 01 பில்லியனான வரவு வரி பெறுமதி மூலம் மிஹின் லங்கா கம்பனிக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,650 மில்லியன் சலுகை கடிதத்திற்கு உரிய வட்டி ரூபா 909 மில்லியனான மூலதனத் தொகையில் ரூபா 90.9 மில்லியனை தீர்வு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததாக மக்கள் வங்கியால் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் அத்தீர்வு 2020 திசெம்பர் 31 ஆந் திகதிய மாற்றல் பத்திரத்தின் மூலம் கணக்குகளுக்கு சீராக்கப்பட்டிருந்தது. | மக்கள் வங்கிக்கு மிஹின் லங்கா நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் தவணையின் ஒரு பகுதி மற்றும் முழு அட்டுறு வட்டியைப் பதிவழிப்பதற்காக கிடைத்த மக்கள் வங்கியால் திரட்டிய நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 1000 மில்லியன் இலாப வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது. | அரச வருமானத்தை திரட்டு நிதிக்கு செலவு வைப்பதற்கும் முறையான நிதிஏற்பாடு உரிய கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் முடியுமான வகையில் முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| II | <u>வருமான குறியீடு 20:02:04</u> – பங்கிலாப வருமானம் | | |
| i | 2020 ஆம் ஆண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 4,918 ஆக இருந்ததுடன் உள்ளவாறான வருமானம் ரூபா 2,855 மில்லியனாக இருந்த காரணத்தினால் அது திருத்திய வருமான மதிப்பீடில் 58 சதவீதமாக இருந்தது. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக தாக்கங்கள் ஏற்பட்டமை மற்றும் பங்கிலாபத்தின் அளவு குறித்த கம்பனியின் பணிப்பாளரால் தீர்மானித்தல் காரணமாக இருந்தது, | சரியான கொள்கை யொன்றை தீர்மானிப்பதற்காகவும் அரசின் செலவினங்களை எந்த மட்டத்தில் வைக்க வேண்டுமென தீர்மானிப்பதற்காகவும் வரவு செலவுத் திட்ட விலகல் எவ்வளவு என்பதை தீர்மானிப்பதற்காகவும் கண்காணிப்பு செயற்பாடுகள் மற்றும் கொள்கை பகுப்பாய்விற்காகவும் வருமான எதிர்வுகூல் மற்றும் வருமான சேகரித்தல் அறிக்கையிடுவதை முறைப்படுத்த வேண்டும். |
| ii | 2 நிறுவனங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானததின விட 65 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான விலகலில் வருமானம் குறைவடந்திருந்தது. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக தாக்கங்கள் ஏற்பட்டமை பொது முயற்சிகளில் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவு ஏற்பட்டுள்ளது. | - மேற்படி - |
| iii | ஆண்டிற்காக 14 நிறுவனங்கள் ரூபா 1,074 மில்லியனான பங்கிலாப வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டில் பங்கிலாபம் வருமானத்திற்கு எவ்வித பங்களிப்பினையும் வழங்கியிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று காரணமாக தாக்கங்கள் ஏற்பட்டமை பொது முயற்சிகளில் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவு ஏற்பட்டுள்ளது. | - மேற்படி - |
| iv | கீழே காட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் கடந்த சில ஆண்டுகளில் வருமானத்திற்கு எவ்வித பங்களிப்பினை வழங்கியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

- சுயாதீன தொலைகாட்சி ஊடக வலையமைப்பு
- கஹட்டகல கிரபைட் லங்கா கம்பனி
- லங்கா சீனி கம்பனி
- லங்கா லொஜிஸ்டிக் கம்பனி
- லங்கா திரிபோஷா கம்பனி

## 2.2. செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் செலவின விடயமொன்றுக்கும் மூலதன செலவன விடயமொன்றுக்காக ஒதுக்கீடு செய்த தேறிய நிதி ஏற்பாடு மீளாய்வாண்டில் செலவிடப்படாமல் ஆண்டின் இறுதியில் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | ஒரு செலவின விடயத்தின் கீழ பூகொட டெக்டைல்ஸ் நிறுவனத்தின் நட்டஈட்டாளர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்கு ஒதுக்கீடு செய்த தொகை கொவிட் தொறிறனால் போக்குவரத்து கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் சேமிக்கப்பட்டதுடன் மற்றுமொரு செலவின விடயத்தில் குத்தகை தவணை கொடுப்பனவிற்காக ஒதுக்கிய நிதிஏற்பாடு , மோட்டார் வாகனத்தை பிரதமர் அலுவலகத்திற்கு மாற்றியதால் சேமிக்கப்பட்டது. | வருடாந்த மதிப்பீட்டில் மிகை மதிப்பீடு செய்யப்படுவதை கட்டுப்படுத்த வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீடு மற்றும் திருத்திய செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது ஒரு செலவின விடயத்தில் விலகல் 25 சதவீதமாக இருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது இவ்வாறான விலகல் சாதாரண நிகழ்வொன்றாகும் | - மேற்படி - |
| (இ) | 08 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் 02 மூலதனச் செலவின விடயங்களுக்காகவும் | கொவிட் தொற்று காரணமாக தாக்கங்கள் ஏற்பட்டமை செயற்பாட்டு நடவடிக்கைகள் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மிகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, ஆண்டில் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 34 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை இருந்தது. | மட்டுப்படுத்தப்பட்டமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டன. | |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் 2301 ஆம் இலக்க உரித்து பங்களிப்பு தொகை விடயத்தின் கீழ் 02 கம்பனிகளின் ஆரம்ப மூலதனத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 40,000,000 தொகையான காசோல குறித்த கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்த போதும் தொழிற்பாட்டினை ஆரம்பிக்காமையால் 2021 யூன் 16 ஆந் திகதி அக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | காசோலை கையளிப்பு 2021.06.17 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் முதலீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டில் இலங்கை மின்சார சபைக்கு மேலதிக மூலதனமாக ரூபா 48,000 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதும் அதற்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளாமை தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் விலை நிலையான நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட மேலதிக மூலதன நிதிஏற்பாடாகும். | திரட்டிய நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவிற்காக பொருத்தமான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரங்களில் மேற்கொள்ளப்படும் மூலதன பங்களிப்பு, உரிய நிறுவனங்களினால் சரியாக கணக்கீடு செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக திணைக்களத்தினால் முறையான வழிகாட்டலொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | மூலதன பங்களிப்பு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அப்பணத்தை மேலதிக மூலதனமாக கருதி கணக்கீடு செய்வதற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையான வழிகாட்டலின் கீழ் மூலதனப் பங்களிப்பு கணக்கீடு செய்வதை உறுதிப்படுத்தும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் |
| (எ) | அரசினால் வழங்கப்படும் மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களை கணக்கீடு | பகுப்பாய்வு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் கணக்கீடு செய்யும் குறைபாடு | மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களை கணக்கீடு செய்தல் |

| | | |
|---|---|---|
| செய்வது தொடர்பாக கண்காணிப்பு வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | காணப்பட்டால் அவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கண்காணிக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 6 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று (ACA – C) படிவம்) திரட்டிய அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த காசுப்பாய்சச்ல் கூற்று அவ்வாறு தயாரிக்கப்படாதிருந்தமை காரணமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | சட்டத்தின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| i ஆண்டினுள் முற்பண அறவீடு ரூபா 6,233,903 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் கூற்றின் கீழ் ரூபா 2,870,051 காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 3,363,852 ஆல் காசு உட்பாய்சசல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் நியமங்களின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும். |
| ii. முற்பணக் கொடுப்பனவு ரூபா 4,778,054 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவு ரூபா 2,249,540 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது, அதனால் ரூபா 2,528,514 ஆன காசு வெளிப் பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் நியமங்களின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும் | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் தனியார் மயப்படுத்தப்பட்ட அரசிற்கு சொந்தமான வியாபாரங்களுக்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் பின்தொடர் நடவடிக்கை மற்றும் அந்நிறுவனங்கள் தொடர்புபட்ட தீர்வுகளுக்கு ஒத்துழைப்பின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2022 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | அனைத்து செயற்பாடு களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையில் 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் அத்தியாயத்தின் 1.1 இனதும் 2020 வரைவு செயலாற்றல் அறிக்கையின் 01 ஆம் அத்தியாயத்தின் 1.1 இனதும் அறிமுகப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரசிற்கு சொந்தமான 396 வியாபாரங்கள் காணப்படுவதாகவும் அதில் 280 திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசிற்கு சொந்தமாக 417 வியாபாரங்கள் காணப்படுவதாகவும் அதில் 300 நிறுவனங்கள் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது | இணங்குகின்றேன். உரிய திருத்தங்கள் 2021 செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | மேற்பார்வை செய்யப்படும் பொது முயற்சிகள் தொடர்பாக நாளதுவரையான தகவல்கள் பேணப்பட வேண்டும். |
| (இ) | எவ்வாறாயினும் மேலே குறிப்பிட்ட 300 பொது முயற்சிகளில் 118 அளவில் தற்போது திணைக்களத்தின் கீழ் மேற்பார்வை செய்யப்பட்டு வருவதாக | இணங்குகின்றேன். | மேற்பார்வைக்கு உள்ளடக்கப்பட்ட வேண்டிய பொது முயற்சிகளுக்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | | தெளிவான நியதிகள் இனங்காண முடியுமாக இருத்தல் வேண்டும். |
| (ஈ) | அந்த 118 பொது முயற்சிகளில் நட்டம் அடைந்து வரும் 33 நிறுவனங்கள் காணப்பட்டன. நிறுவனங்கள் நட்டம் அடையும் போது அது தொடர்பாக திணைக்களத்தின் ஈடுபாடு எவ்வாறென்பது தொடர்பாக கணக்காய்வில் விசாரிக்கப்பட்ட போதும் அதற்கு பதிலாக தேவையான ஆலோசணைகளை வழங்குதல் மற்றும் நிறவனங்களை அறிவூட்டுதல் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்குரிய பின்தொடர் நடவடிக்கையொன்று இடம்பெறுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | ஆலோசணை வழங்குதல் மற்றும் நிறுவனங்களுக்கு அறிவூட்டுதல் என்பவற்றிற்குரிய பின்தொடர் நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு காணப்பட்ட 118 பொது முயற்சிகளில் 18 நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் சில நிறுவனங்கள பல வருடங்களின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டின் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன் முன்னேற்றத்தை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>I 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படாத செயற்பாடுகள் | | |
| | • செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 1.3 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நிர்வாக | 2021 செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் பரவிய கொவிட் - 19 | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | கோவைக்காக (Administrative Agreement) அங்கீகாரம் வழங்குதல்.<br>• கூட்டு உடன்படிக்கையை (Collective Agreement) புதுப்பித்தலுக்காக வசதிகள் வழங்குதல்<br>• கம்பனிச் சட்டம், நல்லாளுகை வழிகாட்டி கணக்காய்வு செய்யப்பட்ட மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | தொற்று காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்த அநேகமான செயற்பாடுகளை எதிர்பார்த்த மட்டத்தில் அடைந்து கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | வேண்டும். |
| II | 2019 செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டின் இறுதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 2020 ஆம் ஆண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்படாத செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | |
| | i. பங்கிலாப கொள்கை<br>ii. உபகார படிக் கொள்கை | 2021 இல் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் இந் நிறுவனங்கள் உரிய வழிகாட்டிகளை தயாரித்துள்ளதாக அறிவித்துள்ளன. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | iii. நல்லாளுகை தொடர்பான நாளது வரையாக்கப்பட்ட வழிகாட்டிக் கோவை 2002 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தை மீளமைப்பதற்குரிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் ஆரம்பமாக இலங்கை பொது முயற்சிகள் 07 இற்காக இலங்கை வங்கி, இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை முதலீட்டு சபை போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்காக நாளதுவரையர்கபட்ட | அமைச்சரவை குறிப்பு உள்ளடக்கப்பட்ட நிறுவனம் உட்பட ஏனைய நிறுவனங்களை மேவுகை செய்யும் வகையில் நல்லாளுகை வழிகாட்டல்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வழிகாட்டல் இதுவரை திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்ல.<br>iv. வருமான கொள்கைக்காக வழிகாட்டல் கோவை<br>v. நிர்வாக கைநூலிற்காக வழிகாட்டல் கோவை | மேற்படி வழிகாட்டலில் இந்த அனைத்து வழிகாட்டல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் கண்காணிப்பிற்கு உள்ளாகும் 300 நிறவனங்களில் 121 நிறவனங்களின் தரவுகளை உள்ளடக்கும் வேலை செயற்பாடுகளின் நிறைவு 40 சதவீதம் அளவில் காணப்பட்டது. | இந்த தரவு முறைமை பிரதானமாக கண்காணிக்கப்படும் 126 பொது முயற்சிகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2 கட்டங்களில் 119 நிறுவனங்கள் மேவுகை செய்யப்பட்டுள்ளன. | சரியான நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை பேணிச் செல்லல் வேண்டும். மற்றும் அதன் மீது தேவையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் வரைவு செயலாற்றல் அறிக்கையின் 07 ஆவது அத்தியாயத்தின் 17.2 விடயத்தின் பிரகாரம் நிறுவகம் தொடர்பான தகவல்கள் அதன் இணைத்தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழி ஊடாக வழங்குவதன் மூலம் பொது மக்களின் பாராட்டுக்கள் ‘ முறைப்பாடுகள் என்பவற்ற வெளியிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் என “இணங்குகின்றதா” என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலே குறிப்பிட்ட பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குரிய தரவு முறைமையை தயாரிப்பது இதுவரை பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் இது இணங்கியதா என்பது கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | இந்த தரவு முறைமை பிரதானமாக கண்காணிக்கப்படும் 126 பொது முயற்சிகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2 கட்டங்களில் 119 நிறுவனங்கள் மேவுகை செய்யப்பட்டுள்ளன. | - மேற்படி - |
| (ஐ) | 2019 ஆம் ஆண்டில் அரச வர்த்தக முயற்சிகளின் இலாப வருமானம் மற்றும் பங்கிலாப வருமானம் முறையே ரூபா 22,833 மில்லியன் மற்றும் ரூபா 5,024 மில்லியனாக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் அது முறையே ரூபா 14,708 மில்லியன் மற்றும் ரூபா ரூபா 2,855 மில்லியன் வரை 36 சதவீதத்தினாலும் 44 சதவீதத்தினாலும் வீழ்ச்சி | கொவிட் தொற்று காரணமாக பொது முயற்சிகளில் இலாபம் மற்றும் பங்கிலாபம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தன. அனைத்து பொது முயற்சிகளில் இலாபம் மற்றும் பங்குலாபம் | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடைந்திருந்தது. 2020 நிதிக் கூற்றுக்களில் வருமானக் குறியீடு 20:02:03 (இலாபம்) இன் கீழ் 33 நிறவனங்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் வருமானக் குறியீடு 20:012:04 (பங்குலாபம்) இன் கழ் 43 நிறுவனங்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரச வர்த்தக வியாபாரங்களின் எண்ணிக்கை 206 ஆக இருந்தது. இதன் பிரகாரம் 150 அரச நிறுவனங்களின் வருமானம்/ இலாபம் / நட்டம் கருத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்கு காரணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அறவிடப்படாமல் இருந்ததுடன் பங்கிலாபம் குறித்த கம்பனியின் இயக்குனர் சபையாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. | |
| (ஒ) | பொது முயற்சிகளில் செயலாற்றல் மட்டம் அதிகளவில் வீழ்ச்சியொன்றுக்கு உட்பட்டிருந்தமை இலாப வருமானம் மற்றும் பங்கிலாப குறைவு மூலம் அவதானிக்கப்பட்டது. பொது முயற்சிகளில் செயலாற்றல் கண்காணிப்பிற்குரிய உள்ளக மற்றும் திறைசேரி முகவர்களுக்காக வழங்கப்பட்ட பயிற்சியை கருத்திற் கொள்ளும் போது பொது முயற்சிகளில் தீர்மானங்களை எடுக்கும் போது ஈடுபடுத்தப்படும் கட்டளைகள் சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக 100 புதிய திறைசேரி பிரதிநிதிகளுக்காக 2020 சனவரி 30 ஆந் திகதி பயிற்சி செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்தது. இதன் இரண்டாம் கட்டமாக மேலும் 100 பிரதிநிதிகளுக்காக பெப்ரவரி மாதத்தின் போது செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்த போதும் அதன் பின்னர் 2020 ஆம் ஆண்டு பூராகவும் செயலமர்வொன்று நடாத்தப்படாதிருந்தமை காரணமாக அதற்காக செயற்பட்டமைக்காக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | கொவிட் தொற்று காரணமாக மார்ச் இன் பின்னர் செயலமர்வுகளை நடாத்த முடியாமல் இருந்தது. | சரியான வழிகாட்டல் மற்றும் ஆலோசணைகள் வழங்கப்பட்டு பொது முயற்சிகளில் செயலாற்றலை மேம்படுத்த வேண்டும். |
| (ஓ) | பொது முயற்சிகளில் செயலாற்றலின் மேற்பார்வைக்குரிய அந்நிறுவனங்களின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கை திட்டத்தை மீளாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த | 2020 ஆம் ஆண்டில் பொது முயற்சிகளின் கூட்டுத் திட்டங்கள் மற்றும் செயல் நடவடிக்கைத் | முறையான ஆலோசணை வழங்கி தகவல்களை பெற்றுக் கொள்ளல் அவற்றின் மீளாய்வை |

| | | | |
|---|---|---|---|
| | போதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அரசிற்குச் சொந்தமான 300 முயற்சிகளுக்கு இடையே திணைக்களத்திற்கு 2020 ஆம் ஆண்டின் கூட்டுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டங்களை சமர்ப்பித்தலும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | திட்டங்கள் எதிர்பார்த்த மட்டத்தில் மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முறைப்படுத்துதல். |
| (ஔ) | பொது முயற்சிகளில் காணப்படும் பிரதான சிக்கல்களை தீர்வு செய்வதற்காக பெருந்தோட்டங்கள் தவிர விவசாய பிரிவின் ஏனைய நிறுவனங்களுக்காக 2020 ஆம் ஆண்டில் ஒரு கலந்துரையாடலும் சில வியாபாரங்களுக்காக 02 கலந்துரை யாடல்களும் நடாத்தப்பட்டிருந்தன. எனினும் கொள்கை பிரிவின் முயற்சிகளில் காணப்படும் கூடுதலான பதவியணியினர் காரணமாக ஊழியர் கிரயம் அதிகரித்தல், நிறுவனங்களின் நல்லாளுகை பலசவீனங்கள் ஆர்வமில்லாத ஊழியர்களுடன் நடவடிக்கை எடுத்தல் சிக்கலான பாரிய சிக்கல்களை தீர்வுசெய்வதற்காக 2020 ஆம் ஆண்டில் எவ்வித கூட்டமொன்றும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று காரணமாக திட்டமிட்ட நிகழ்ச்சிகளை நடாத்த முடியாமல் இருந்தன. | பாரிய சிக்கல்கள் காணப்படும் நிறுவனங்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கி வழிகாட்டல்களை வழங்குதல் |